**செய்தி வெளியீடு எண்–993** **நாள்– 17.11.2008**

**<u>பேரூராட்சிகள் துறை தொடர்பான அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகள் அடங்கிய நூல் தொகுப்பினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (17.11.2008)வெளியிட்டார்கள்</u>**

பேரூராட்சிகள் துறை தொடர்புடைய அரசாணைகள் மற்றும் முக்கிய சுற்றறிக்கைகள் அடங்கிய நூல் தொகுப்பினை **மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 17.11.2008 அன்று வெளியிட்டார்கள்.**

பேரூராட்சிகள் துறை 7.5.1981 அன்று துவக்கப்பட்டு நகர்ப்புர மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இத்துறை அரசின், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. பேரூராட்சிகள் துறையின் செயல்பாட்டிற்கென அரசாணைகள் மற்றும் வழிகாட்டு சுற்றறிக்கைகள் அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. பேரூராட்சிகள் துறை அலுவலர்களின் நிர்வாகம் மற்றும் திட்டச் செயலாக்கத்தினை எளிதாக்கிடவும், மேம்படுத்தவும், அவற்றை தொகுத்து வெளியிட பேரூராட்சிகளின் ஆணையரால் முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, 183 முக்கிய அரசாணைகள் அடங்கிய முதன்மைத் தொகுப்பு ஒன்றும், 35 சுற்றறிக்கைகள் அடங்கிய உபதொகுப்பு ஒன்றும் என இரண்டு தொகுப்புகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்கள். இத்தொகுப்பு அரசு வலைதளத்திலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. இத்தொகுப்புக்கள் பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தக் கூடிய குடிநீர் வழங்கல், கட்டிட அனுமதி, வரியினங்கள், மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல், இதர முக்கிய திட்டப்பணிகள் மற்றும் நிர்வாக மேம்பாடு குறித்த அரசாணைகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இத்தொகுப்புக்களை அரசு முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திரு.கே. தீனபந்து, இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

வெளியிடப்பட்ட தொகுப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயல் அலுவலர்களின் நிர்வாக செயல்பாடுகளுக்கும், மேம்பட்ட திட்டச் செயலாக்கத்திற்கும் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் பயன்பாட்டிற்கும் பயனுள்ளதாக அமையும் வகையில் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப., மற்றும் பேரூராட்சிகளின் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இத்தொகுப்பிலுள்ள விபரங்களை வலையதளம் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். வலைதள முகவரி www.tn.gov.in/dtp

**வெளியீடு–இயக்குநர், செய்தி மககள் தொடர்புத்துறை, சென்னை–9.**